இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1981 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,

# குடிசனமதிப்பீட்டு (திருத்தச்) சட்டம்

(1981, மார்ச்சு மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

1981, மார்ச்சு மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 75 தபாற் செலவு : சதம் 50

# 1981 ஆம் ஆண்டின் 16 இலக்க, குடிசனமதிப்பீட்டு (திருத்தச்) சட்டம்

[1981, மார்ச்சு மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 80/79
1305

குடிசனமதிப்பீட்டுக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1981 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, குடிசனமதிப்பீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

143 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

2. இதன்கத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் குடிசனமதிப்பீட்டுக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு, அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"குடிசன மதிப்பீடெடுக்குமாறு அமைச்சர் பணித்தல்.

2. இலங்கையில் வாழ்வோரின் குடிநிலைப் புள்ளிநிலையையும், சமூக நிலையையும், பொருளாதார நிலையையும் கண்டறிவதற்கு அவசியமானதென அமைச்சர் கருதக்கூடிய, சனத்தொகை, வீடமைப்பு, கமத்தொழில், பண்ணைவிலங்கு, வியாபாரம், தொழில், கைத்தொழில் அல்லது வர்த்தகம் பற்றிய அல்லது அத்தகைய வேறு விடயங்கள் பற்றிய மதிப்பீடொன்று எடுக்கப்பட வேண்டும் என, காலத்துக்குக் காலம் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பணித்தல் அமைச்சருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

குடிசன மதிப்பீட்டுக் கண்காணிப்பாளரது நியமனம்.

3. ஏதேனும் குடிசனமதிப்பீடு எடுத்தலைக் கண்காணிப்பதற்கு என "குடிசன மதிப்பீட்டுக் கண்காணிப்பாளர்" என அழைக்கப்படும் அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளரின் பதவிக்கு நியமனம் ஒன்று செய்யப்படாவிடில், புள்ளிவிபரவியல் கட்டளைச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட புள்ளிவிபரவியல் பணிப்பாளர், குடிசன மதிப்பீட்டுக் கண்காணிப்பாளராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இக்கட்டளைச்சட்டத்தின்மூலம் குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு உரித்தாக்கப்பட்ட அத்தகைய எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அவர் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.".

2—ஏ 54216—6,550 (12/80)

முதன்மைச் சட்டவாக்கத் தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) விதிகள் கசெற்றில் இரண்டு தடவைகள் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீடுகளின் கடைசி வெளியீட்டுத் தேதியிலிருந்து அது பயனுறுதலும் வேண்டும்; அத்துடன் அது நீதிமுறைக் கவனத்திற்கெடுக்கப்படுதலும் வேண்டும்.

(4) அத்தகைய ஏதேனும் விதியை மீறும் எவரேனும் ஆள் நீதிவான் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஒரு மாதத்திற்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"அரசாங்க அதிபரும், மாநகரசபையின், நகரசபையின் அல்லது பட்டின சபையின், மாநகர முதல்வரும், தவிசாளரும், அல்லது விசேட ஆணையாளரும் ஆணையாளர்களாயிருத்தல்.

6. நிருவாக மாவட்டமொன்றின் அரசாங்க அதிபர், அவரது மாவட்டத்தின் குடிசனமதிப்பீட்டு ஆணையாளராயிருத்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு மாநகரசபையினதும், நகரசபையினதும், பட்டினசபையினதும் மாநகர முதல்வர், தவிசாளர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையானது விசேட ஆணையாளர் ஒருவரால் நிருவகிக்கப்படுமிடத்து, அவ்விசேட ஆணையாளர், அத்தகைய மாநகரசபையினது, நகரசபையினது அல்லது பட்டினசபையின் உள்ளூர் இடப்பரப்புக்கான குடிசனமதிப்பீட்டாணையாளராயிருத்தலும் வேண்டும் :

ஆயின், அத்தகைய மாவட்டத்திற்கு அல்லது மாநகரசபைக்கு அல்லது நகரசபைக்கு அல்லது பட்டினசபைக்கு வேறு எவரேனும் ஆள் ஆணையாளராக நியமிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 8 ஆம், 9 ஆம்,10 ஆம் பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"எண்ணீட்டாளர்களையும், மேற்பார்வையாளர்களையும், பிரதான மேற்பார்வையாளர்களையும் ஈடுபடுத்தல்.

8. ஆணையாளரொருவர் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட உள்ளூர் இடப்பரப்பினுள் குடிசனமதிப்பீடெடுப்பதற்கென அல்லது குடிசனமதிப்பீடெடுப்பதற்குத் துணைபுரிவதற்கென அல்லது குடிசனமதிப்பீடெடுப்பதை மேற்பார்வை செய்வதற்கென எவரேனும் ஆளை, விடயத்திற்கேற்றவாறு எண்ணீட்டாளராக, மேற்

பார்வையாளராக அல்லது பிரதான மேற்பார்வையாளராக எழுத்துமூலம் ஈடுபடுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஆளை எந்நேரத்திலும் விடுவிக்கலாம.

குடிசனமதிப்பீட்டலுவலர்கள் எவர் என்பது.

9. இக்கட்டளைச் சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கண்காணிப்பாளரும் ஒவ்வொரு பிரதிக் கண்காணிப்பாளரும், உதவிக் கண்காணிப்பாளரும், ஆணையாளரும், உதவி ஆணையாளரும், பிரதான மேற்பார்வையாளரும், எண்ணீட்டாளரும் இக்கட்டளைச்சட்டத்தின் கருத்திற்குட்பட குடிசனமதிப்பீட்டலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குட்பட பகிரங்க அலுவலர் ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

இருப்பாட்சியாளர் குடிசன மதிப்பீட்டு அலுவலரை உட்புகவிடுதலும் இலக்கங்கள் ஒட்ட அனுமதித்தலும்.

10. ஏதேனும் காணியில், கட்டடத்தில், வீட்டில், அடைப்பில், கலனில் அல்லது வேறு இடத்தில் இருப்பாட்சி கொண்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், எவரேனும் குடிசனமதிப்பீட்டு அலுவலரை குடிசனமதிப்பீட்டு நோக்கத்திற்கென தேவைப்படுத்தக்கூடியதும் அந்நாட்டின் வழக்கத்தினைக் கருத்திற்கொண்டு நியாயமானதுமான விதத்தில் அவர்களது வளவுகளினுள் அனுமதித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள் இருப்பாட்சி கொண்டுள்ள ஆதனத்தின்மீது அல்லது ஆதனத்திற்கு குடிசனமதிப்பீட்டு நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எழுத்துக்களையோ குறியீடுகளையோ அல்லது எண்களையோ வண்ணந்தீட்டுவதற்கு, குறியீடுசெய்வதற்கு அல்லது ஒட்டுவதற்கு அனுமதித்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"வாழ்மனைகளில் அல்லது தாபனங்களில் அட்டவணைகள் விடப்படுதலும் பிரதான இருப்பாட்சியாளரினால் அல்லது பொறுப்பாயுள்ள ஆளினால் நிரப்பப்படுதலும்.

13. (1) இதற்கென அமைச்சர் ஆக்கக்கூடிய அத்தகைய விதிகளுக்கிணங்க, எவரேனும் குடிசனமதிப்பீட்டலுவலரானவர், அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அட்டவணையொன்றை, அத்தகைய குடிசனமதிப்பீட்டலுவலரின் உள்ளூர் இடப்பரப்பினுள் உள்ள ஏதேனும் வாழ்மனையின் அல்லது ஏதேனும் தாபனத்தின் அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்தின் பிரதான இருப்பாட்சியாளரினால் அல்லது பொறுப்பாயுள்ள ஆளினால் அல்லது அவரில்லாதவிடத்து அத்தகைய மனையின் எவரேனும் பொறுப்பாயுள்ள உறுப்பினரினால் நிரப்பப்படும் நோக்கத்திற்கென, அத்தகைய மனையில் அல்லது தாபனத்தில் விட்டுவைக்கலாம் அல்லது விட்டுவைக்கச் செய்விக்கலாம்.

(2) அத்தகைய ஏதேனும் அட்டவணை விட்டுவைக்கப்படுமிடத்து, மனையின் பிரதான இருப்பாட்சியாளர் அல்லது தாபனத்திற்கு அல்லது அது ஈப்பாகம்

தொடர்பாகவுள்ளதோ அப்பாகத்துக்குப் பொறுப்பாயுள்ள ஆளொருவர், அவரது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை அதனை நிரப்புதல் வேண்டும். அல்லது நிரப்பச்செய்தல் வேண்டும் என்பதுடன், ஒப்பமிடுவதற்கென இடம் எதுவும் ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பின், அத்தகைய இடத்தில் தனது பெயரை ஒப்பமிடுதலும் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு நிரப்பப்பட்டு, ஒப்பமிடப்பட்ட அட்டவணையை, அம்மனை அல்லது தாபனம் அமைந்துள்ள உள்ளூர் இடப்பரப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளரிடம் அல்லது எண்ணீட்டாளரிடம் அல்லது ஆணையாளர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு ஆளிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது :—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழான அட்டவணை அல்லது அட்டவணைகள் எவ்வாளிடம் ஒப்படைக்கப்படுகின்றதோ அல்லது ஒப்படைக்கப்படுகின்றனவோ அவ்வாள், அவரது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, அவ்வுட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட விபரங்களைக் கொண்டு அட்டவணையை அல்லது அட்டவணைகளை நிரப்பச்செய்வதுடன், ஒப்பமிடுவதற்கென இடமெதுவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய இடத்தில் அவரது பெயரை ஒப்பமிடுதலும் வேண்டும் ; அத்துடன், அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது, அவ்வாறு நிரப்பப்பட்டு ஒப்பமிடப்பட்ட அட்டவணையை அல்லது அட்டவணைகளை அவ்விடப்பரப்பிற்கென நியமிக்கப்பட்ட எண்ணீட்டாளரிடம் அல்லது மேற்பார்வையாளரிடம் அல்லது அவ்விடப்பரப்பிற்கான ஆணையாளர் பணிக்கக்கூடிய அத்தகைய வேறு ஆளிடம் அல்லது குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளரினால் அல்லது அவ்விடப்பரப்பிற்கான ஆணையாளரினால் பணிக்கப்பட்ட ஒரு விதத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"கடற்படை, தரைப்படை அல்லது வான் படைகளையும் யாத்திரீகர்கள், பிரயாணிகள் ஆகியோரையும் எண்ணீடுசெய்தல்.

15. குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளரானவர், இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அமைச்சரினால் ஆக்கப்பட்ட விதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட தகவலைப்பெறும் நோக்கத்திற்காக மிக்க உகந்த முறையில் இசைவாக்கப்பட்டது என அவருக்குத் தோன்றும் அத்தகைய வழிகளினாலும் முறைகளினாலும்—

(அ) இலங்கை கடற்படையை அல்லது தரைப்படையை அல்லது வான்படையை அல்லது

ஏதேனும் போர்க்கலத்தைச் சேர்ந்த எவரேனும் ஆட்கள் குழு தொடர்பாகவும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் குடிசனமதிப்பீடெடுப்பதற்கென நியமிக்கப்பட்ட காலத்தின்போது, பிரயாணம் செய்துகொண்டிருந்த அல்லது கப்பலில் இருந்து அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக மேற்கூறியவாறு குடிசனமதிப்பீட்டு அலுவலர்களால் கணக்கு எடுக்கப்படவுள்ள ஏதேனும் வீட்டில் தங்கியிருந்திராத எல்லா ஆட்கள் தொடர்பாகவும்,

தகவல் பெறுதல் வேண்டும் என்பதுடன், இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டாற்போன்று, அவரால் செய்யப்படவேண்டியுள்ள பொழிப்பில் அத்தகைய தகவலை உள்ளடக்குதலும் வேண்டும்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.

"தொழிலாளர்கள் பற்றி விவரத்திரட்டுக்கள் அனுப்புவதற்கு தொழில் தருநர்களுக்குள்ள கடமை.

17. (1) சுரங்கம் அல்லது பார்க்குழி வெட்டும் ஆதனத்தில், தொழிற்சாலையில், வேலைக்களத்தில் அல்லது வேறு வர்த்தக அல்லது கைத்தொழில் தாபனத்தில் தமக்குக்கீழ் அல்லது தமது பொறுப்பில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனரெனக் கூறும் வெளிப்படுத்துகையொன்றை விதிக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய சுரங்கம் அல்லது பார்க்குழி வெட்டும் ஆதனம், தொழிற்சாலை, வேலைக்களம் அல்லது வேறு வர்த்தக அல்லது கைத்தொழில் தாபனம் அமைந்துள்ள மாவட்டத்தின் குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளருக்கு அல்லது ஆணையாளருக்குச் செய்தல், ஏதேனும் சுரங்கம் அல்லது பார்க்குழி வெட்டும் ஆதனத்தில், அல்லது ஏதேனும் தொழிற்சாலையில், வேலைக்களத்தில் அல்லது வேறு வர்த்தக அல்லது கைத்தொழில் தாபனத்தில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களுக்குப் பொறுப்பாகவுள்ள தொழில் தருநர் அல்லது ஆள் ஒவ்வொருவரதும் கடமையாதல் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்துகையானது, கசெற்றிலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பத்திரிகைகளிலும் குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளரினுல் அல்லது அம் மாவட்டத்தின் அல்லது இடப்பரப்பின் ஆணையாளரினுல் அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்படவேண்டும் எனக்கோரும் அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதிலிருந்து பதினுன்கு நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையைச் செய்யும் ஒவ்வோர் ஆளிடமும், அத்தகைய ஆளினால் தேவையான விபரங்களுடன் நிரப்பப்படுவதற்கென, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அட்டவணையொன்றினை அல்லது அட்டவணைகளை ஒப்படைத்தல் விடயத்திற்கேற்றாற்போன்று குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளரினது அல்லது ஆணையாளர் ஒவ்வொருவரதும் கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு ஏதேனும் அட்டவணை ஒப்படைக்கப்படுகின்றதோ, அந்த ஆள் ஒவ்வொருவரும், அந்நோக்கத்திற்கென ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய பற்றுச்சீட்டை ஒப்பமிட்டு, அவர் எந்த ஆளிடமிருந்து அட்டவணையைப் பெற்றுக்கொண்டாரோ அந்த ஆளிடமே திருப்பி ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், அவரது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை குடிசனமதிப்பீடு எடுக்கும் நேரத்தில் அவரது பொறுப்பின்கீழ் சுரங்கத்தில் அல்லது பார்க்குழி வெட்டும் ஆதனத்தில், தொழிற்சாலையில், வேலைக்களத்தில் அல்லது வேறு வர்த்தகத் தாபனத்தில் அல்லது கைத்தொழில் தாபனத்தில் இருந்த எல்லா ஆட்கள் தொடர்பான விபரங்களுடன், அட்டவணையை அல்லது அட்டவணைகளை நிரப்புதல் வேண்டும்; அத்துடன் அதில் அவரது பெயரை ஒப்பமிட்டு அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது, அவ்வாறு நிரப்பப்பட்டு ஒப்பமிடப்பட்ட அட்டவணையை அல்லது அட்டவணைகளை சுரங்கம் அல்லது பார்க்குழி வெட்டும் ஆதனம் தொழிற்சாலை, வேலைத்தலம் அல்லது வேறு வர்த்தக தாபனம் அல்லது கைத்தொழிற்தாபனம் எந்த உள்ளூர் இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அவ்வுள்ளூர் இடப்பரப்பிற்கென நியமிக்கப்பட்ட எண்ணீட்டாளரிடம் அல்லது குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளரிடம் அல்லது ஆணையாளர் பணிக்கக்கூடிய அத்தகைய வேறு ஆளிடம் அல்லது குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளர் அல்லது ஆணையாளர் பணிக்கக்கூடிய அத்தகைய முறையில் ஒப்படைத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவல் எவ்வாறு வெளியிடப்படுதல் வேண்டும் முதலியன.

20அ. (1) இருபதாம் பிரிவில் எது எப்படியிருப்பினும், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட வெளியீடெதுவும், எவரேனும் தனியாள் தொடர்பான விபரங்களாகவுள்ளவை என எவையேனும் விபரங்களை அடையாளங் காண்பதை வெளிக்காட்டுதல் வேண்டும் அல்லது வசதிப்படுத்துதல் வேண்டும்.

(2) இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் புள்ளிவிபரங்களைச் சேகரிப்பதிலும் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், அவர், இக்கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவன்றி, இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவலெதனையும் வெளிப்படுத்தவோ அல்லது பயன்படுத்தவோ மாட்டாரென்னும் வெளிப்படுத்துகை ஒன்றினை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்தல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.**

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

" தண்டங்கள்.

21. (1) (அ) கண்காணிப்பாளரினால் அல்லது ஆணையாளரினால் அல்லது கண்காணிப்பாளரின் அல்லது ஆணையாளரின் சார்பில் வேறு எவரேனும் குடிசன மதிப்பீட்டு அலுவலரினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்துரைகள் அல்லது பணிப்புக்கள் எதற்கும் போதிய காரணமின்றி இணங்கியொழுக மறுக்கும் அல்லது அவ்வாறு இணங்கியொழுகுவதில் கவனவீனமாக இருக்கும் அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட கடமை எதனையும் புரிவதில் நியாயமானளவு விழிப்புடனிருக்கவும் கவனமெடுக்கவும் தவறும் ; அல்லது

(ஆ) வேண்டுமென்றே பொல்லாப்பான அல்லது முறையற்ற கேள்வியொன்றைக் கேட்கும் அல்லது தெரிந்துகொண்டே ஏதேனும் பொய்யான விபரத்திரட்டினை ஆக்கும் ; அல்லது

(இ) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது அரசாங்கம் தவிர்ந்த எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் கொடுப்பனவை அல்லது வெகுமதியைக் கேட்கும், பெறும் அல்லது எடுக்கும்,

இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் ஏதேனும் குடிசனமதிப்பீட்டின் நோக்கங்களுக்காக குடிசனமதிப்பீட்டுக் கண்காணிப்பாளரால் அல்லது குடிசனமதிப்பீட்டு ஆணையாளரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் குடிசனமதிப்பீட்டு அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம்

ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு (அத்தகைய குற்றப்பணம் அத்தகைய நீதிவானின் சாதாரண நியாயாதிக்கத்தை விஞ்சுவதாகவிருப்பினும்கூட) அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) குடிசனமதிப்பீட்டலுவலர் ஒருவரினால் எந்தக் கேள்வி அவரை விழித்துக் கேட்கப்படும்போது அக்கேள்விக்கு விடையளிப்பதற்கு சட்டப்படி கட்டுப் பட்டவராயுள்ளாரோ அந்தக் கேள்விக்கு அவரது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை விடையளிக்க மறுக்கும் அல்லது வேண்டுமென்றே அதற்குப் பொய்யான விடையளிக்கும்; அல்லது

(ஆ) குடிசனமதிப்பீட்டு அலுவலர் ஒருவரினால் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட அட்டவணையில் தேவைப்படுத்தப்பட்டுள்ள எவ்விபரங்களை நிரப்புவதற்கு அவர் சட்டப்படி கட்டுப்பட்டவராயுள்ளாரோ அவ்விபரங்களை நிரப்ப மறுக்கும்; அல்லது

(இ) வேண்டுமென்றே பொய்யான அல்லது பிழையான அட்டவணையினை, கூற்றினை அல்லது விபரத்திரட்டினை ஆக்கும், ஒப்பமிடும், ஒப்படைக்கும் அல்லது ஆக்கச்செய்யும், ஒப்பமிடச்செய்யும் அல்லது ஒப்படைக்கச் செய்யும்; அல்லது

(ஈ) காணி, கட்டடம், வீடு, அடைப்பு, கலன் அல்லது வேறு இடம் ஒன்றினுள் இக்கட்டளைச்சட்டத்தினால் அவர் அனுமதிப்பதற்குத் தேவைப்பட்டவாறான அத்தகைய நியாயமான அனுமதிதலை குடிசனமதிப்பீட்டு அலுவலரொருவருக்கு அனுமதிக்க மறுக்கும்; அல்லது

(உ) குடிசனமதிப்பீடெடுக்கும் நேரத்திலிருந்து நான்கு கிழமைகள் முடிவடைவதற்குள், குடிசனமதிப்பீட்டு நோக்கங்களுக்கென வண்ணந்தீட்டப்பட்ட, குறியீடு செய்யப்பட்ட அல்லது ஒட்

டப்பட்ட எழுத்துக்களை, குறியீடுகளை அல்லது இலக்கங்களை அகற்றும், அழிக்கும், மாற்றும் அல்லது அவற்றிற்கு ஊறு விளைக்கும் ; அல்லது

(ஊ) இக்கட்டளைச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிக்கு இணங்கியொழுக மறுக்கும் அல்லது இணங்கியொழுகுவதில் கவனவீனமாக இருக்கும்,

எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு (அத்தகைய குற்றப்பணம் அத்தகைய நீதிவானின் சாதாரண நியாயாதிக்கத்தை விஞ்சுவதாகவிருப்பினுங்கூட) அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) (அ) பிரிவு 20அ என்பதன்கீழ் அவரால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்றினை மீறி அறிந்துகொண்டே செயலாற்றும் ; அல்லது

(ஆ) ஏதேனும் தகவலைப் பெற்றவராகி, அத்தகவலானது 20அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுக வெளிப்படுத்தப்பட்டதென்பதை அறிந்துகொண்டு, அத்தகவலை வெளியிடும் அல்லது அதனை வேறு எவரேனும் ஆளுக்குத் தெரிவிக்கும்,

எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு (அத்தகைய குற்றப்பணம், அத்தகைய நீதிவானின் சாதாரண நியாயாதிக்கத்தை விஞ்சுவதாகவிருப்பினுங்கூட) அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.